**செய்தி வெளியீடு எண்:652** **நாள் : 29.12.2014**

**செய்தி வெளியீடு**

சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தின் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றுவதற்கு அலோபதி மருத்துவப் பிரிவின் அனைத்து துறைகளுக்கான நேர்முகத் தேர்வு புதுடில்லி, பெங்களூரு, ஸ்ரீநகர், மும்பை, கொச்சின், அகமதாபாத் மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களில் ஜனவரி,2015ல் நடைபெற உள்ளது.

இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 55 வயதிற்குட்பட்ட கண்சல்ட்ண்டுகள்(Consultants) சிறப்பு மருத்துவர்கள்(Specialist) மற்றும் 45 வயதிற்குட்பட்ட எம்பிபிஎஸ்+டிப்ளமோ தேர்ச்சி பெற்ற ரெசிடெண்ட் மருத்துவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பணி அனுபவத்திற்கேற்ப ஊதியத்துடன் இலவச விமான டிக்கெட், குடும்ப விசா, இலவச இருப்பிடம் மற்றும் இதர சலுகைகள் வேலையளிப்போரால் வழங்கப்படும்.

எனவே, விருப்பமுள்ள மருத்துவர்கள் தங்களின் முழு விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை ovemcldr@gmail.com என்ற ஈமெயில் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, 044–22502267/22505886/09444696724 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவும் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

**நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
**சென்னை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**